# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## OS.No. 61/2023
## வழக்கு சாட்சி PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கருப்பச்சிநாதன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கிருஷ்ணசாமி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : வடகவுஞ்சி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 62/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 02.04.2026 |

<u>**முதல் விசாரணை :**</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. எனது ஆதார் அடையாள அட்டை நகல் **வா.சா.ஆ.13** ஆகும்.
2. எனது குடும்ப அட்டை நகல் **வா.சா.ஆ.14** ஆகும்.

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சியம் அளிக்கச்சொல்லி அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி பாலசுப்பிரமணி சாட்சியம் அளிக்க அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு 2 சென்ட் நிலம் உள்ளது என்று எனக்கு எவ்வாறு குறிப்பிட்டு தெரியும் என்றால் வாதி எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் . என் வீடு 2 சென்ட் என்பதால் வாதி வீடும் 2 சென்ட் அளவு என்று எனக்குத் தெரியும். எனது வீட்டின் சர்வே எண் விபரம் எனக்குத் தெரியும். வாதி வீட்டின் சர்வே எண் விபரம் எனக்குத் தெரியாது . எனக்கு சர்வே

எண் விபரம் தெரியாது என்று தற்போது சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் சர்வே எண் விபரம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ள விபரம் தவறு என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் சர்வே எண் விபரம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ள விபரம் தவறு என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல . தாவா சொத்தில் பாலசுப்பிரமணி தான் படிக் கட்டினார் . படிக் கட்டி சுமார் 2-3 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். பாலசுப்பிரமணி எனது உறவினர் என்றால் சரிதான் . பாலசுப்பிரமணி கட்டிய படி பட்டா இடத்தில்தான் வருகிறது சரிதான். பட்டா நிலத்தில் தான் படி வருகிறது என்று பட்டாவை படித்துத் தெரிந்து கொண்டேன். தோராயமாக பட்டாவைப் படித்து கண்ணால் கண்டறிந்து பட்டா நிலத்தில்தான் படி வருகிறது என்று சொல்லமுடியாது என்றாலும் , முறையாக அளவையரைக் கொண்டு அளந்து பார்த்தால்தான் அதுகுறித்து தெளிவுப்பட ஒரு நபரால் சொல்லமுடியும் என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஏதுவாக தயார் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் , அதில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியாது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்னென்ன விபரங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று என்னால் முழுவதுமாக சொல்லமுடியுமா என்றால் சொல்ல இயலாது . எனக்கு வழக்கு விபரங்கள் தெரியாது என்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.02 18:20:34 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.